**<u>04.11.2025</u>**

**<u>அசல் வழக்கு எண். 63/2020</u>**

**<u>வா.சா. 1 –</u>** திரு. சக்திவேல் முருகன்

**<u>சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.</u>**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

1. நீங்கள் கோயில் தலைவராக இருந்தற்கான எந்த ஆவணமானது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் காரிகோயில்அம்மன் கோவிலுக்கு வரி கொடுத்ததில்லை என்றால் 2012 க்கு பிறகு வரி கட்டவில்லை.

2. உங்கள் நிர்வாகம் சரியில்லை என சொல்லி காவல்நிலையத்தில் ஊர்மக்கள் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. தற்போதைய தலைவர் யார் என்றால் தலைவர் இல்லை. அந்த ஊர் அம்மன் கோயிலுக்கு நிர்வாக குழு 2 வருடத்திற்கு மாற்றுவார்கள் என்றால் சரியல்ல.

3. உங்களை நிர்வாக குழுவிலிருந்து 2005 ல் நீக்கிய பிறகு நீங்கள் தனியாக கோயில் கட்டி கும்பிட்டு வருகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் மீது பழனி குடும்பத்தார் போலிசில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான்.

4. முதுமொத்தான்மொழி பஞ்சாயத்து தலைவர் உங்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த பஞ்சாயத்து மக்களுக்கு வரக்கூடிய போரை உங்கள் போர் எனச் சொல்லி அந்த ஒயரை வெட்டியதால்தான் அவர் உங்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

5. தில்லைராஜன் தோட்டத்தில் உங்கள் மகன் மோட்டார் வயரை திருடியதாகதான் போலிசார் விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. உங்கள் குடும்பத்தின் மீது ஊரில் நல்ல மதிப்பு இல்லை என்றால் சரியல்ல.

6. பிரதிவாதியின் தந்தை உங்களுக்கு பிறகு நிர்வாக குழுவின் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். உங்களை பதவியில் இருந்து நீக்கியதை வைத்து காழ்புணர்ச்சியால்தான் பிரதிவாதியை அடித்து துன்புறுத்தினீர்கள் என்றும்

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2025.11.04 17:27:54 +0530

நீதிமன்றம் சந்தேகத்தின் பேரில்தான் உங்களை விடுதலை செய்தது என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம்இருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காகதான் இந்த வழக்கு தாக்கல்ச செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ராஜன் என்பவர் பஞ்சாயத்து தேர்தலில் நின்று தோற்றுவிட்டார் என்றால் சரிதான். ராஜனுக்கு பிரதிவாதியும் அவரது குடும்பமும் வேலை செய்யவில்லை என்பதால் உங்களுக்கு ஆதரவாக அவர் பொய்யாக சாட்சியம் அளிக்கிறார் என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u> இல்லை**

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2025.11.04 17:28:01 +0530